

## செங்கிப்பட்டி அரசு என்ஜினீயரிங் கல்லூரியில்

# விளையாட்டு விழா

### வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது

தஞ்சாவூர், மே.23-

தஞ்சையை அடுத்த செங்கிப்பட்டியில் அமைந்துள்ள அரசினர் என்ஜினீயரிங் கல்லூரியில் விளையாட்டு விழா கல்லூரி முதல்வர் ஜெயபால் தலைமையில் நடந்தது. விழாவில் தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி உடற்கல்வி இயக்குனர் மகேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அண்ணா பல்கலைக்கழக மண்டல அளவிலான முதல்-அமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் மற்றும் கல்லூரி அளவிலான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சுழற் கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியை விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் ஸ்வர்ண லஷ்மி மற்றும் உடற்கல்வி இயக்குனர் கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.